REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 3] சென்னை: ஆனி 30உ வியாழன் (14—7—55) ★ ★ வெளியூர்: ஆனி 31உ வெள்ளி (15—7—55) [இதழ் 26

சென்னை-இரங்கூன் கப்பல் போக்குவரத்து மீண்டும் ஆரம்பமாகும்?

சென்னை—இரங்கூன் இடையே நடைபெற்று, இரண் வாரங்களுக்குமுன் நிறுத்தப்பட்ட பிரயாணிகள் கப்பல் போக்குவரத்து மீண்டும் விரைவிலேயே ஆரம்பிக்கப்படும் என்று நம்பக மாகத் தெரிவிக்கப்படுகிறது.

சென்னை—இரங்கூன் இடையே சென்றுவந்த 'ஜலகோபால்' என்ற கப்பலுக்குப் பதிலாக புதிய கப்பல் ஒன்றை சர்க்காரோ, அல்லது 'சிந்தியா கப்பல் கம்பெனி'யினரோ வாங்கிய பின்னர் மீண்டும் இப்போக்குவரத்து துவங்குவது குறித்து இறுதி முடிவு மேற்கொள்ளப்படுமாம்.

ஜூலை 15: வாழ்விலோர் திருநாள்

'விரிசல்கள் விட்ட கண்ணாடிபோல் தமிழ் சமுதாயம் புரையோடியுள்ளது'

'சிறுமை காணாது சிறப்புடன் வாழ்ந்த இனம்—சிறுமதியாளர்களின் சூழ்ச்சியில் சிக்கிச் சீரழிகிறது!'

'போர்ச் சின்னம்' எந்நாட்டிலும் பொறித்த தமிழரின் இன்றைய நிலைபற்றி ஈ. வெ. கி. சம்பத் விளக்கம்

"தமிழர்கள், பழங்குடி மக்கள்—தொன்மையான இனத்தவர்—என்பது மட்டுமல்ல; தமிழர் நாகரிகமும் மிக மிகப் பழைமையானது. உலகிலுள்ள பல்வேறு நாட்டு மக்கள் ஆடைகளின்றியும், அரையாடை உடுத்தியும் திரிந்துகொண்டிருந்தபோது தமிழகத்தில் உயர்தரமான ஆடைகள் நெய்யப்பட்டன என்பதற்கு சான்றுகள் பல உண்டு; நெடுங்காலத்திற்கு முன்பே மாடமாளிகைகளையும், கூடகோபுரங்களையும் கட்டி, வாழும் முறையினை தமிழ் நாட்டினர் கண்டு வாழ்ந்திருக்கின்றனர். இன்றைய ஐரோப்பிய மொழிகள் பலவும் தோன்றுதற்கு முன்பே தமிழ் மொழி தோன்றி, இலக்கண இலக்கிய வளத்தோடு திகழ்ந்தது; நமது அரசியல், 'நீதியிலும் ஆற்றலிலும் சிறந்து விளங்கிற்று,' என்பதைப் பல குறிப்புகள் விளக்குகின்றன. அன்றைய தமிழ்ப் படைகளின் ஆற்றலும், வீரமும், இமயத்தில் கொடி பொறித்து, கடாரத்தை (பர்மாவை) வென்று, சாவகத்திலும், இலங்கையிலும் தமிழாட்சி நிறுவி, தமிழருக்குப் பெருமையைத் தேடித் தந்துள்ளது.

நமது கவனத்தை மற்றொன்று கவர்கிறது. ஐரோப்பிய வரலாற்றில் கிருஸ்துவர்களுக்கும்—பாலஸ்தீனத்து இஸ்லாமியருக்கும் மதச் சச்சரவின் காரணமாக போர் மூண்டது; 'கிருத்துவ மதத்தைக் காக்கவே இப்புனிதப் போர்; எனவே, மதப் பற்றுள்ள அனைவரும் இதில் ஈடுபடவேண்டும்,' என வெறியோடு அத்தனை ஐரோப்பிய அரசுகளும் படை திரட்டி அனுப்பின; அப்போது இங்கிலாந்து நாட்டு மன்னனாய் இருந்த மாவீரன் ஒருவன்—சிங்க மனம் படைத்த ரிச்சர்டு எனப் புகழ் பெற்றவன், தானே தலைமை வகித்து, படையோடு புனிதப் போரில் ஈடுபட இங்கிலாந்தைவிட்டுக் கிளம்பினான்; ஆனால், அவன் இங்கிலாந்திற்கு திரும்புமுன், அவனது தம்பி ஜான் என்பவன் பட்டத்தை அபகரித்துக்கொண்டான்; அதேபோல், இந்திய வரலாற்றிலும், மொகலாய காலத்தில் படையெடுப்பு காரணமாகவோ, வேறு காரணம் பற்றியோ தலைநகரிலிருந்து சிறிது காலம் மன்னன் வெளியேற நேரிட்டால், திரும்புவதற்குள் தம்பியோ, மகனோ, மந்திரியோ, படைத் தலைவனோ பட்டத்தை அபகரித்துக்கொண்டு ஆள ஆரம்பித்துவிட்டதை நிறையக் கேள்விப்படுகிறோம்;

"அன்றையத் தமிழகத்தில், சேரன்—செங்குட்டுவனது அரசியல் திறம், வியக்கத்தக்க வகையில் வளர்ந்திருந்ததை ஒரு குறிப்பு நல்லமுறையில் உணர்த்துகிறது; 'கங்கைக் கரையில் வாழ்ந்திருந்த ஆரிய மன்னரிருவர் தமிழர்தம் வீரத்தைப் பழித்துப் பேசினர் எனக் கேட்டு வெகுண்ட சேரன்—செங்குட்டுவன், தனது படையுடன் கிளம்பி, கங்கைக்கரை வரை சென்று, செருக்கோடு பேசிய கனகன், விஜயன் என்னும் அவ்விரு ஆரிய மன்னரோடு பொருது, போரில் வென்று, அவ்விருவர் தலைகளின் மீதும் பெருங்கற்களைச் சுமத்தித் தமிழகம் கொண்டுவந்தான்,' என ஒரு குறிப்புள்ளது. படையெடுப்பை முடித்துக்கொண்டு தனது நாடு திரும்ப எத்தனையோ மாதங்கள் ஆகியுள்ளன; அவன் திரும்பும் வரையில், அவனது நாட்டில் வெளிநாட்டவரின் படையெடுப்போ, உள்நாட்டு குழப்பமோ ஏதும் நடைபெறவில்லை என்பதை நோக்கும் எவரும் அன்றைய தமிழகத்தின் அரசியல் திறம் கண்டு பெரும் வியப்பையே அடைகிறார்கள்; இவைகளெல்லாம், முன்பு தமிழ்ப் பெருமக்கள் எத்தனை சிறப்புடனும், இன்பமுடனும் வாழ்ந்தனர் என்பதைக் குறிப்பிடுகின்றன. ஆனால் இன்று நமது நிலை என்ன?"

—இவ்வாறு, 10—7—55 மாலை 6 மணிக்கு, திரு முகமது சுல்தான் அவர்கள் தலைமையில் நடைபெற்ற திருவப்பூர் (புதுக்கோட்டை) தமிழ் மன்ற ஆண்டு விழாவில் சிறப்புரை ஆற்றுகையில், தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் பேசினார்:—

"சதா சூடான அரசியலில ஈடுபட்டுள்ள நான் இன்று பேசும் மேடை தமிழ் மன்றத்தின் ஆண்டு விழா மேடை என்பதை நினைவில் வைத்துக்கொண்டு தமிழைப் பற்றியும், தமிழர்களின் இன்றைய வாழ்வைப் பற்றியும், அன்றைய வாழ்வுப் பற்றியுமே பேச விரும்புகிறேன். அப்படிப் பேசும்போது அரசியல் என்று எண்ணக்கூடிய வகையில் ஏதேனும் தென்படக் கூடும். அவை, தமிழை மையமாகக்கொண்டு, மீறிடும் நியாயமான உணர்ச்சிகளின் பிரதிபலிப்பாகவே இருக்கும்.

"தமிழ் நாட்டில் தமிழுக்கு நல்ல செல்வாக்கு வளர்ந்து வருகிறது; தமிழ்ப் பற்று, ஆகாதவர் தமிழ் வெறி எனப் பழிக்கும் அளவுக்கு வளர்ந்துள்ளது. 15 ஆண்டுகளில்தான் இவ்வளவு பெரிய மாற்றம் விளைந்துள்ளது. 15 ஆண்டுகளுக்குமுன் இதுபோன்ற கூட்டங்களில் பேசுகையில், 'தலைவரவர்களே' என அழைக்காமல், 'அக்கிராசனாதிபதி அவர்களே' என்றுதான் பேச்சு தொடங்கும்! 'சகோதர, சகோதரிகளே' அன்று—'தோழர்களே, தோழியர்களே' இன்று! 'நமஸ்தேயும், ஜேயும்' அன்று — 'வணக்கம், வாழ்க' இன்று! 'ஓட்டல்' என்ற பெயர்களை அருவருக்கிறோம்—'உணவு விடுதி' என்ற பெயரைக் கண்டு மகிழ்வுகொள்ளுகிறோம். இந்த மாற்றத்தை முதன் முதலில் வலியுறுத்தியபோது, வலியுறுத்தினவர்களை 'வகுப்பு துவேஷிகள்' என்றுபலர் அர்ச்சித்தனர்; ஆனால், இன்று, இந்த நல்ல மாற்றம் நாட்டில் நிகழ்ந்துவிட்டது.

"அத்தோடு நில்லாமல், தமிழர்களின் தொன்மை வாய்ந்த திருக்குறள், புறநானூறு, அகநானூறு, மற்றும் ஏனைய சங்க நூற்களில் அன்றைய தமிழினத்தின் வாழ்க்கை நெறி, வீரம், போர் முறை, போர்க் கருவிகள், படை ஆற்றல், காதல், வாணிபம், கலை ஆகியவை பற்றிய குறிப்புகளை அறிய இன்றைய தமிழகம் துடித்துக்கொண்டிருப்பதைக் காண்கிறோம்.

"பத்து, பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு, தமிழறிஞர்களின் சொற்பொழிவுகள் என்றால் பத்து, பதினைந்து தமிழ்ப் புலவர்கள்தான் கூடியிருந்து கேட்பர்; இன்றோ தமிழறிஞர்களின் உரைகளைக் கேட்க பதினாயிரக்கணக்கில் மக்கள் கூடுகின்றனர். முன்பு, தமிழ்ப் பண்டிதர்தான் இருந்தார்—இன்று தமிழ்ப் புலவர்களைத்தான் பார்க்கலாம். தமிழ்ப் புலவர்களுக்கு மக்கள் நல்ல மதிப்பளிக்கின்றனர்—சிறப்புக்கள் செய்கின்றனர்.

"பதினைந்து ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட நாடகங்களில் தமிழாசிரியர்களைப் பலியிட்டு நகைச்சுவை ஊட்டப்பட்டது; இன்றோ, பள்ளிகளில் தமிழாசிரியருக்குள்ள மதிப்பும், செல்வாக்

(4-ம் பக்கம் பார்க்க)

இலட்சியத்தை செயலாற்றிய நன்னாள்!

கொள்கை உறுதிப்பாட்டை உணர்த்திய புனித நாள்

ஆச்சாரியார் ஆதிக்க வெறியை வீழ்த்திய விடுதலை நாள்

1953—ஜூலை 15-ம் நாள், தனது உயிர் போன்ற இலட்சியத்தையும், அவ்விலட்சியத்தை அடைவதற்காகத் தான் பிடிவாதமாகப் பற்றியுள்ள கண்ணியம்—கட்டுப்பாடு—அமைதி ஆகிய மூன்றின் ஆற்றலையும் காங்கிரஸ் ஆளவந்தார் அறியவும், அவனியோர் தெரிந்து தெளிவுபெறவும், தி. மு. கழகம் மும்முனையில் அறப்போர் களம் அமைத்தது.

திராவிடப் பெருங்குடி மக்களை மதியாது, அவர்கள் மீது, 'அவர்களை அடக்கியாளும் அதிகாரம் பெற்றுள்ளோம்' என்ற அகந்தையில், இந்தியப் பேரரசின் பிரதமர் பண்டிதர் பகட்டமாக வீசிய ஏசலை—இழிமொழியை எதிர்த்து, இரயில் நிறுத்த அறப்போர் ஜூலை 15-ம் நாளில் துவக்கப்பட்டது.

அரசியலில் இந்தியப் பேரரசின் ஆதிக்கத்தைக் காட்டும் நடமாடும் விளம்பரச் சின்னமான—தமிழ் நாடு எங்கணும் ஓடிக்கொண்டிருந்த புகைவண்டிகள், பகல் 12 மணிக்கு நிறுத்தப்பட்டன!

அதன் விளைவாக, அரசியலார், ஏறத்தாழ ஐயாயிரத்திற்கு மேற்பட்ட நமது தி. மு. கழகத் தோழர்களை, தனது விருந்தாளியாக ஏற்றுக்கொண்டனர். அவர்களில் பெரும் எண்ணிக்கையினரை, பல நாள் சிறைபடுத்தி, வேலை வாங்கி சோறிடும் ஆற்றல், அதுசமயம் ஆட்சிப் பொறுப்பில் இருந்துவந்த ஆச்சாரியாரால் இயலாது போயிற்று!

அடுத்தது, ஆச்சாரியார் புதிய தொடக்கக் கல்வித் திட்ட எதிர்ப்பு மறியல்.

அறிவு பெறும் கல்வியை திராவிட இனச் சிறார்களுக்கு இல்லாது செய்வதின் மூலம், மீண்டும் ஆரிய எத்தர்களின் ஏகாதிபத்தியத்திற்கு ஏற்றம் தேடிவிடலாம் என்ற கெடு நினைப்பில் புதிய தொடக்கக் கல்வியைத் திணித்தார் ஆச்சாரியார் 'அதிகாரம் பெற்றிருக்கிறோம்' என்ற செருக்கில்!

இம்மூல உண்மையையும், திட்டம் வெற்றி பெறுவதினால் ஏற்பட இருக்கும் கேட்டின் தன்மையையும் நன்குணர்ந்த நமது தி. மு. கழகம், அச்சதித் திட்டத்தை ஒழிக்க அமைச்சர் ஆச்சாரியார் 'ஆஸ்ரமத்'தின் முன் அமைதியான மறியல் அறப்போரைத் துவங்கியது.

அகத்திலும், புறத்திலும் நிராயுதபாணிகளான—மறியல் அறப்போர் களம் புகுந்த நமது செயல் வீரர்களை, தடிகொண்டு தாக்கி குருதி கொட்டச் செய்தார்; கண்ணீர்ப் புகை குண்டுகள் வீசி மயக்கமுற்று வீழ்ந்திடவும் செய்தார்—யாக்கை நிலையாமை எனத் தெரிந்ததும் பதவி நிரந்தரமானது எனத் திடமாகக் கருதிக் கொண்டிருந்த அமைச்சர் ஆச்சாரியார்!

மூன்றாவது, பொருளாதாரத் துறையில் வடவரின் ஆதிக்கம் வளர்ந்துவரும் பேதத்தை நம்மவர் உணரச் செய்ய, டால்மியாபுரத்தை 'கல்லக்குடி' எனப் பெயர் மாற்றும் முயற்சியை நமது தி. மு. கழகம் மேற்கொண்டது.

தனது கல்வித் திட்டத்தை எதிர்த்து மறியல் செய்த நம்மவர்களை அமைச்சர் ஆச்சாரியார் தடிகொண்டு மண்டைகளை உடைத்தது போல் இல்லாமல், கல்லக்குடியிலும் தூத்துக்குடியிலும் இரயில் நிறுத்தப் போராட்டத்தைப் பார்த்துக் கொண்டிருந்த திராவிடக் குடிமக்களை நோக்கிச் சுடவும் துணிந்துவிட்டார்; அதன் விளைவாக தூத்துக்குடியில் நால்வரும், கல்லக்குடியில் இருவரும் உயிர் துறந்தனர்!

நமது மும்முனை அறப்போர் துவக்கப்படுவதற்கு முன் தினத்திற்கு முன்தினமே, நமது பொதுச்செயலாளர் உள்ளிட்ட ஐந்து செயற்குழு உறுப்பினர்களைக் கைது செய்து, காவலில் வைத்துவிட்டது ஆச்சாரியார் துரைத்தனம்! தலைவர்களைக் கைது செய்துவிட்டால், அறப்போர் படை வரிசையில் குழப்பமேற்படும்—கட்டுப்பாடு குலையும்—பலாத்காரம் புகும்—அவைகளைப் புகலாகக் கொண்டு, தி. மு. கழகத்தை நிர்மூலமாக்கி விடலாம்—என்பது, ஆச்சாரியாரின் மதியூகமாகும்! ஏமாற்றம்—பெரிய அளவில் அவருக்குக் கிடைத்தது!

(4-ம் பக்கம் பார்க்கவும்)

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 14—7—'55 வியாழன்

கூறுவாரா அப்பெருந்தகை?

புதுப் புதுத் தொழில்கள் தென்னகத்தில் நிறுவப்படாமைக்கும், அதே நேரத்தில் வடநாட்டில் பெரும் பெரும் தொழில்கள் நிர்மாணிக்கப்பட்டிருப்பதற்கும், இந்தியப் பேரரசின் இயல்பு, ஓரவஞ்சனை என நாம் குற்றஞ்சாட்டுகிறோம். குற்றஞ்சாட்டுவதுடன் நின்றுவிடாமல், அதற்குரிய சான்றுகளையும் காட்டி, குற்றச்சாட்டை மெய்ப்பித்தும் உள்ளோம்.

நமது குற்றச்சாட்டிற்குத் தக்க மறுப்புரை கூற முடியாமல், இந்தியப் பேரரசின் எடுபிடிகள், நம்மீது காய்ந்து விழுவதுடன், பொருந்தாப் பொய்யுரைகளைச் சமாதானம் எனக் கூறியும் வருகின்றன. அதில் ஒன்றுதான், வர்த்தக—உருக்குத் தொழில் அமைச்சர் டி. டி. கே. அவர்கள் கூறியுள்ள மயக்குரையும் ஆகும்.

தென்னகத்தில் தொழில்கள் நிர்மாணிக்கப்படாமைக்கு, இந்த நிலக்கரியும் பெரும் முதலாளிகள் இல்லாமையும் காரணங்களாகும் என, தன்னறிவும், பெற்றுள்ள கல்வியும் தன்னைக் காட்டிக் கொடுத்துவிடாது என்ற திடநம்பிக்கையுடன், அந்த அமைச்சர் அங்கலாய்த்து இருக்கிறார். பொருளியல் பற்றி தாம் தெரிந்துள்ள அளவிற்குத் தெரிந்துள்ளவர் நாட்டில் இருக்க முடியாது என்ற அற்ப நினைப்பில், அந்த அமைச்சர் அவ்வாறு குளறியுள்ளார் போலும்! வடமொழி வேதாகமங்கள் போன்று, பொருளியலும் குறிப்பிட்ட இரு பிறப்பாளர் தவிர்த்து, வேறு பிற பிறப்பாளர் கற்க உரிமை பெற்றில்லாத ஒரு கலைத் துறை எனக் கனம் அமைச்சர் கருதிக்கொண்டு, மேற்குறித்தவாறு பிரச்சினையை எழுப்பி உள்ளார் போலும்!

மருந்துக்கும் நிலக்கரிகிடைக்காத இடத்தில் கிடைக்கும் இரும்புக் கனிப் பொருளைக் கொண்டு, உருக்குத் தொழிற்சாலை நிர்மாணிக்கப்பட்டு இலாபகரமாக நடத்தப்பெற்று வரும் தொழில் ஏற்பாடுகளும் உள்ளன.

நிலக்கரி மட்டுமே இருந்து இரும்புக் கனி இல்லாத இடத்திலும், மட்ட ரக இரும்பு வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு, உருக்குத் தொழிலை உருவாக்கி, உலகம் பாராட்டும் வகையில் தேவையான இரும்புப் பொருட்களை செய்து குவித்துவரும் நிலைமையும் இருக்கத்தான் இருக்கிறது.

நிலக்கரியும் இல்லாது, இரும்புக் கனிப்பொருளும் அறவே இல்லாது, இரண்டு மூலப் பொருளிலும் இறக்குமதியையே நம்பி, உருக்குத் தொழிற்சாலையைத் துவங்கி, எல்லாப் பொருள்களையும் தன்னகத்தே கொண்டுள்ள நாடு வெட்கமும் துக்கமும் படும் வகையில், வெற்றியாக உலகச் சந்தையில் போட்டியிட்டுவரும் நாடும் இருக்கத்தான் இருக்கிறது.

முதல் படைத்தவரும், முதல் அற்றவரும் பின்னர் உருவானவர்களேயல்லாது, பிறக்கும் பொழுதே முதலை மூட்டை கட்டிக் கொண்டோ, அல்லது வெறுங்கையுடனோ பிறந்தவர்கள் அல்ல. பெரும் முதல் படைத்த முதலாளிகளைக் கொண்டில்லாத நாட்டில் தொழில் வளம் ஏற்படுத்த முடியாது எனும் டி. டி. கே. அவர்களின் வாதம், சிறுபிள்ளைத்தனமானது—தீராப் பிணி வகையில் சேர்க்கத் தக்கது. நிற்க.

நிலக்கரியும் பெரும் முதலாளிகளும் இல்லாத நாடு, வெறும் பாலைவனமாகவாவது அல்லது வெறும் விவசாய நாடாகவாவது இருந்து தீர வேண்டுமென்பது, டி. டி. கே. அவர்களின் வாதத்திலிருந்து கிடைக்கப் பெறும் உண்மையாகும் அதன்படி பார்த்தால், தென்னகம் என்றென்றைக்கும் விவசாயப் பகுதியாகவே இருந்து வரவேண்டும்; வேண்டுமானால் சிறு சிறு குடிசைத் தொழில்களைக் கொண்டு தங்கள் பொருளாதாரத்தைச் செம்மைப்படுத்திக் கொள்ள வேண்டும் என முடிவு கட்டிவிட வேண்டியதாகிறது.

இப்படி ஒரு நாடும் உலகில் இருந்ததாகவோ, இருப்பதாகவோ, எதிர்காலத்திலும் இப்படியே இருந்து வரவேண்டும் என முடிவு கட்டிக்கொண்டு இருப்பதாகவோ கூறுவதற்கில்லை.

வளர்ச்சியை விரும்புகின்றன; வாழ்வு பெற விடாமுயற்சியுடன் பாடுபடுகின்றன; வெற்றி கண்டு மகிழவும் செய்கின்றன.

நம்மை ஆண்டுகொண்டிருந்த இங்கிலாந்து, முன்னூறு ஆண்டுகளுக்கு முன்னால், வெறும் மண் பிடித்தலையே நம்பிக்கிடந்த நாடாகத்தான் இருந்திருக்கிறது.

ஆடைகளுக்குத் தேவைப்படும் மூலப் பொருளான பருத்தி தன்னுட்டில் இல்லாத நிலையிலேயே, உலக மக்கள் முழுதுக்கும் ஆடை அளிக்கும் அளவில் தனது நெசவுத் தொழிலை வளர்த்து வெற்றி பெற்றிருக்கிறது; இரும்புத் தொழிலிலும் அப்படித்தான் இங்கிலாந்து முன்னேறி இருக்கிறது.

இன்று, உலக வல்லரசுகளின் ஒரு அணிக்குத் தலைமை தாங்கி நிற்கும் அமெரிக்கா, ஏறத்தாழ நூறு ஆண்டுகளுக்கு முன் தொழில் துறையில் எப்படி இருந்தது? அந்த நிலைமை இன்றைய அமெரிக்கத் தொழில் நிலையுடன் ஒப்பிட்டுப் பார்ப்போமானுல், மெள்ள மெள்ளத்தான் அங்கு மூலதனம் வளர்ந்து குவிந்திருக்கிறது என்ற உண்மையை உணர்ந்துகொள்ளலாம்.

எந்த ஒரு தொழிலுக்குமே இன்றியமையாத மூலப் பொருளும், பெருத்த மூலதனமும் துவக்கத்தில் பெற்றில்லாத ஜப்பான், அமெரிக்காவையும் அச்சுறுத்தக்கூடிய அளவில், எவ்வாறு தொழில் வளம் பெற்றது என்பதற்கு, டி. டி. கே. தான் விளக்கம் கூறவேண்டும்.

சோவியத் நாட்டில் தொழில் வளம் எப்படி ஏற்படுத்தப்பட்டது? பிற நாடுகளிலிருந்துதான் ஆலோசனை உதவிகூட கிடைக்கப் பெறாத இக்கட்டில் அல்லவா தனது தொழில் துறையை, தன்னையும் ஒரு பெரும் வல்லரசாக உயர்த்திக்கொள்ளும் அளவிற்கு, சோவியத் நாடு சீராக்கிக்கொண்டு இருக்கிறது? எவ்வாறு அது சாத்தியமாயிற்று?

'நிலக்கரி இல்லை; பெரும் முதலாளிகள் இல்லை; எனவே தென்னகத்தில் தொழில்கள் நிர்மாணிக்கப்படவில்லை' எனப் பகட்டாகப் பேசுகிறாரே, அமைச்சர் கிருஷ்ணமாச்சாரியார், அவர் கூற வேண்டும்—மேற்குறிப்பிட்டுள்ள நாடுகளின் தொழில் வெற்றிக்கான இரகசியத்தை! கூறுவாரா அப்பெருந்தகை?

இந்தியாவிற்கு நீர்மூழ்கிகள்?

புதுடில்லி, ஜூலை 11—

அடுத்த 6 ஆண்டுகளில், இந்தியக் கடற்படைக்கு இங்கிலாந்திலிருந்து வரும் போர்க் கப்பல்கள், தற்போதுள்ளவற்றைக் காட்டிலும் மிகச் சிறந்தவையாக இருக்குமென்று இந்தியக் கடற்படைத் தலைவர் கூறியிருக்கிறார்.

இந்தியாவிலேயே போர்க் கப்பல்கள் கட்டுவதற்கான திட்டம் ஆரம்பிக்கப்பட்டு விட்டதென்றும், விசாகையில் இந்துஸ்தான் கப்பல் தொழிற்சாலையில், முதன் முதலாக ஒரு 'ரோந்து' கப்பல் கட்டுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன என்றும், அதையடுத்தாற்போல் 'கண்ணி' அகற்றுவதற்கான சிறு கப்பல்கள் போன்றவை கட்டப்படும் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

இந்தியக் கடற்படைக்கு நீர்மூழ்கிக் கப்பல்கள்வாங்கும் உத்தேசம் தற்போது இல்லையென்றாலும், அவற்றை வாங்குவதற்கு ஏற்கனவே திட்டமிடப்பட்டிருப்பதாகவும், எப்போது வாங்குவதற்கு இயலும் என்பதுபற்றி ஒன்றும் தெரியவில்லை என்றும் கூறியிருக்கிறார்.

வங்காளியை தாய் மொழியாக கொண்ட சிறுர்களுக்கு விமோசனம்!

கட்டாய உருது கற்பதிலிருந்து விலக்கு!

உருது மொழிச் சிறுவர்களுக்கு வங்காளியைகற்கும் புதியதொல்லை

கிழக்கு வங்காள ஆரம்பப் பள்ளிகளில் படித்துவரும் வங்காளியைத் தாய் மொழியாகக் கொண்ட குழந்தைகள், இனி கட்டாயமாக உருது மொழியைக் கற்கத் தேவை இல்லை என, கூட்டு முன்னணி அமைச்சர் குழு கட்டளை பிறப்பித்திருக்கிறது. நான்கு ஆண்டுகளுக்கு முன், முஸ்லிம் லீக் மந்திரிசபை, மொழிப் பாகுபாடின்றி சிறுர்கள் அனைவரும் கட்டாயமாக உருது மொழியைக் கற்றுக்கொள்ள வேண்டும் எனும் ஏற்பாட்டை செயலாற்றியது.

கட்டாய உருது மொழியைக் கற்பதிலிருந்து வங்காளி மொழி குழந்தைகளுக்கு விலக்களிப்பதுடன் புதிய கட்டளை நிற்பதாக இல்லை; உருதுவைத் தாய்மொழியாகக் கொண்ட குழந்தைகள், கட்டாயமாக வங்காள மொழியைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்ற ஒரு கட்டளையையும் போட்டிருக்கிறது—கூட்டுமுன்னணி மந்திரி சபை!

கிழக்கு வங்காள கல்விமுறை திருத்தி அமைப்புக் குழு, தம் தாய் மொழியுடன் வேறு ஒரு மொழியையும் கற்கவேண்டுமென்று பிஞ்சு மூளையில் பாரத்தை ஏற்றக் கூடாது எனச் செய்திருக்கும் சிபாரிசை ஒட்டியே, இப்புதிய உத்தரவு பிறப்பித்திருப்பதாக கிழக்கு வங்காளக் கல்வி மந்திரி அசமத் சவுத்திரி அறிவித்துள்ளார்.

தம் செயலை பாகிஸ்தான் அரசாங்கக் கல்விக் குழு ஒப்பியுள்ளதாகவும் அவர் அறிவித்துள்ளார்.

மதக் கருத்துக்கள், வழக்கம் போல் அராபிய மொழியில் மாணவர்களுக்குப் போதிக்கப்படும்.

வங்காள மொழியையும் ஒரு ஆட்சிமொழியாக ஒப்புக்கொள்ள வேண்டும் என்பதும், கூட்டுமுன்னணியின் பல கோரிக்கைகளில் ஒன்றாகும்.

தண்ணீர் தீர்வை கைவிடப்படும்?

ஆந்திர மாநிலத்தில், தண்ணீர் தீர்வையை 25 சதவிகிதத்திற்கு உயர்த்துவது என்று ஆந்திர சட்ட சபைக் கூட்டத்தில் வரவு-செலவு திட்ட விவாதத்தின்போது முதல் அமைச்சர் கோபால் ரெட்டி தெரிவித்த பிரரேபணை தற்போது கைவிடப்பட்டுவிட்டதாகக் கூறப்படுகிறது.

மேற்படி தீர்வை ரத்துப்பற்றி சட்ட சபை ஐக்கியக் காங்கிரஸ் கட்சி, முதலமைச்சரை சந்தித்து விவாதித்தனர் என்று கூறப்பட்டிருக்கிறது.

காங்கிரஸ் சட்ட சபைக் கட்சியினரிலும்பலர் இப்பிரரேபணையை எதிர்த்தனர்; கம்யூனிஸ்டுகளும 'பலத்த' எதிர்ப்பு தெரிவித்தனர் என்பதும் அறிந்ததே.

'பூமிதானம்-இருக்கும் வறுமையை பகிர்ந்து கொள்வதாகும்'

'வளத்தை பகிர்ந்து கொள்வதற்கான மனப்பண்பை பூமிதானம் உண்டாக்கும்'

★

"இந்தியாவை இன்று எதிர்நோக்கியிருக்கும் மிகப் பெரிய பிரச்சினை வறுமையேயாகும்; ஆனல் ஆச்சாரியா வினோபா பாவேயின பூதான இயக்கம் வறுமையை ஒழிப்பதற்கான வழிவகையைக் காண்பதைவிடுத்து, அதனை நாடு முழுமையிலும் பரவச் செய்வதாக இருக்கிறது;

"இந்தியாவில் இன்றுள்ள மிக முக்கியப் பிரச்சினை நிலப்பிரச்சினை என்று கூறப்படுவதை நான் நம்பமாட்டேன்; நிலப் பிரச்சினைகளையெல்லாம், தகுந்த குடிவாரச் சட்டங்களை இயற்றி அதன் மூலம் தீர்த்துவிடலாம்; ஆனல் பூதான இயக்கம், நிலமற்றவர்களுக்கு அதிக நிலம் ஒன்றும் கொடுக்க வழி செய்யவில்லை; அது, ஒரு குறிப்பிட்ட நிலத்தின் மீது, குறிப்பிட்ட ஒருவருக்கு மட்டும் இருக்கும் உரிமையைப் பலருக்கும் மாற்றுகிறது—அவ்வளவுதான்!

"எனவே, ஆச்சாரியா வினோபா பாவேயின் பூமிதான இயக்கத்தினல் நாட்டிலுள்ள வறுமையை ஒழித்துவிட முடியாது."

இவ்வாறு, பம்பாய் மாநில கவர்னர் அரிகிருஷ்ண மேதாப், ஆச்சாரியா வினோபா பாவேயின் நில இயக்கம் குறித்து கருத்தறிவித்திருக்கிறார்.

மேலும் அவர், நாட்டில் உள்ள அல்லது—கிராமங்களில் உள்ள ஒவ்வொருவரும் நிலம் வைத்திருக்க வேண்டியது அவசியமில்லை என்றும், தங்கள் சொந்த முயற்சியால பயிர் செய்கிறவர்களுக்கு மட்டுமே நிலம் வழங்கப்பட வேண்டும் என்றும் கூறியிருக்கிறார்.

★

"செல்வமோ வறுமையோ—நம்மிடமிருப்பதை, நேர்மையாக நாம் விநியோகிக்க வேண்டுமென்பதை, குறைகூறுவோர் உணரவேண்டும்; வறுமையைப் பங்கிட்டுக்கொண்டால், அதன் கொடுமை குறையும்;

'நிலத்தைக் கூறு போடுவது இதன் நோக்கமல்ல; மக்களின் உடைந்த இதயங்களை ஒன்றுபடுத்துவதே நோக்கமாகும்; உள்ளம் ஒன்றுபட்ட பின்னர், செல்வத்தைப் பெருக்க, மக்கள் ஒன்றுபட்டு உழைக்க முடியும்; அதனுல்தான் எல்லோரிடமும்—ஏழையிடமும் கூட, நன்கொடை தருமாறு கோரப்படுகிறது,"

என்று, வினோபா பாவே அவர்கள், 'பூமிதானம் வறுமையைத்தான் பகிர்ந்தளிக்கும்,' என சிலர் கூறுவதை மறுத்து கூட்டமொன்றில் பேசுகையில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

ஒருமித்த ஆதரவு கிடையாதாம்!

அபிவிருத்தித் திட்டங்கள் பிற்போக்கானவையாம்!

கம்யூ. நம்பூதிரிபட் கூறுகிறர்!

"காங்கிரசின் அயல் நாட்டுக் கொள்கைகளைப் பொதுவாகவும், அதன் உள்நாட்டுக் கொள்கைளில் சிலவற்றையும் கம்யூனிஸ்டு கட்சி ஆதரித்தாலும், 'காங்கிரசுக்குப் பூரண ஆதரவு' என்ற பேச்சே கிடையாது,"

என்று அகில இந்திய கம்யூனிஸ்டுக் கட்சியின் தற்காலிகப் பொதுச் செயலாளராக இருக்கும் நம்பூதிரிபட் கூறியிருக்கிறர்

"காங்கிரசின் அபிவிருத்தித் திட்டக் கொள்கைகளில் சில வரவேற்கக்கூடிய அம்சங்கள் கொண்டவைகளாகவே இருந்த போதிலும், அவைகள் அனைத்துமாகப் 'பிற்போக்கானவை'களே; ஆகவே, அதற்கெதிராக எல்லா ஜனநாயகச் சக்திகளையும் கம்யூனிஸ்டுக் கட்சி ஒன்று திரட்டும்"

என்றும் குறிப்பிட்டிருக்கிறர்.

மேலும் அவர், இந்தியாவின் அயல் நாட்டுக் கொள்கைகளில் நல்ல மாற்றம் ஏற்பட்டுள்ளதென்றாலும, அந்தக் கொள்கைகளுக்கு நிபந்தனையற்ற ஆதரவு இருக்காது என்றும், காமன்வெல்த் போன்ற நிறுவனங்களில் இந்தியா இன்னும் அங்கம் வகிப்பதை கம்யூனிஸ்டுக் கட்சி எதிர்த்தே வருமென்றும், நேருவின் ரஷ்ய, இதர கம்யூனிஸ்டுச் சார்பு நாடுகளின் சுற்றுப் பயணம் இந்திய சர்க்கார் கொள்கையில் ஏற்பட்டுள்ள மாற்றத்தையே காட்டுகிறதென்றும் கூறினர்.

ரஷ்ய விவசாய தூதுக் குழு அமெரிக்கா வருகை

விவசாய முறைகளை அறிந்து செல்வராம்!

ரஷ்ய விவசாயத் தூதுக்குழு ஒன்று அமெரிக்காவிலுள்ள விவசாய முறைகளை அறிந்து வருவதற்காக அமெரிக்கா சென்றுள்ளனராம்.

இதற்குப் பதில் நடவடிக்கையாக அமெரிக்க விவசாயக் குழு ஒன்று ரஷ்யா வர ரஷ்ய சர்க்கார் ஒப்புதல் வெளியிட்டுள்ளனராம்.

பனம்பள்ளிக்குசிறிதளவும் மனச்சாட்சி கிடையாதாம்!

வாக்குறுதியை மீறுவதுடன் காரியத்தில் எதையும் செய்யமாட்டாராம்!

'ஜனநிபதியின் ஆட்சியே மேலானதாகும்' என்கிறார் மக்கள் சபை உறுப்பினர் அன்னீ மாஸ்கரைன்

"பனம்பள்ளி கோவிந்தமேனன் மாநிலத்தின் முதலமைச்சராக இருப்பது நாட்டிற்கும், அவர் காங்கிரசின் தலைவராக இருப்பது காங்கிரஸ் நிறுவனத்திற்கும் கெடுதியை விளைவிப்பதாக இருக்கிறது என்பதே என் உறுதியான நம்பிக்கையாகும்; நீதி, நியாயம் ஆகியவை பற்றி பனம்பள்ளி கொண்டுள்ள கருத்து—அவர் நடவடிக்கைகள் அனைத்தும் நாமறிந்ததே; காங்கிரஸ் கட்சியின் கொள்கைகளை அமுல் நடத்தவோ, அல்லது அதை கௌரவப்படுத்தவோ பனம்பள்ளிக்குச் சிறிதளவுகூட மனச்சாட்சி கிடையாது."

"சில இலாகாக்களைச் சேர்ந்த மேலதிகாரிகளின் நடவடிக்கைகள் குறித்து அண்மையில் நான் முதலமைச்சரிடம் நேரில் சென்று எடுத்துக் கூறினேன்; அதுபற்றி விசாரணை செய்து வேண்டுவன செய்யலாமென்று என்னிடம் உறுதி கூறினர்; ஆனால், இதுவரையிலும் அவர் எதுவுமே செய்யவில்லை; அவர் வாக்குறுதியை மீறுவது மட்டும்தான் செய்ய முடியுமே தவிர, காரியத்தில் எதுவும் செய்யமாட்டார் என்றே கருதுகிறேன்."

—இவ்வாறு, திரு—கொச்சி மாநிலத்தைச் சேர்ந்த மக்கள் சபை உறுப்பினரான திருமதி அன்னிமாஸ்கரைன், திரு-கொச்சி மாநிலத்தில் நிலச் சீர்திருத்த மசோதா குறித்தும், திரு-தமிழகப் போராட்ட வழக்குகள் குறித்தும், பனம்பள்ளி அமைச்சரவை குறித்தும் கருத்தறிவிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

தொடர்ந்து அவர் கூறினர்:—

"யாருடைய தயவிலும் அதிகார பீடத்தில் அமர்ந்திருக்க காங்கிரஸ் மந்திரி சபை விரும்ப வேண்டியதே இல்லை; பொது மக்களின் மகத்தான பக்க பலத்துடன் எந்த ஒரு கட்சியும் ஆட்சியை ஒழுங்காக நடத்தத் திறமையற்றதாக இருக்குமானால், இங்கு, ஜனநிபதியின் நேரடி ஆட்சி அமைவதுதான் நல்லது; அத்தகைய ஆட்சியினுல் ஜனநாயகத்திற்கு எந்தவிதமான ஆபத்தும் ஏற்பட்டு விடாது."

திரு—தமிழக வழக்குகள் பற்றிக் கூறுகையில் அவர் குறிப்பிட்டார்:—

"சட்டத்தையும் ஒழுங்கையும் நாட்டில் அமுல் நடத்தவும், மக்கள் உயிர், பொருள் ஆகியவற்றைப் பாதுகாக்கும் பொறுப்பும் சர்க்காருக்கு உண்டு; எனவே, இதனை நன்கு ஆராய்ந்து திரு—தமிழக வழக்குகள் திரும்பிப் பெறப்பட வேண்டியவைதாஞ என்பதை சர்க்காரே முடிவு செய்ய வேண்டும்."

"ஆண்டொன்றில் ரூ 2500-க்கு அதிகமான வருமானமுள்ள நிலங்களைத் தன் உடைமையாக வைத்துக்கொள்ள எந்தக் குடும்பத்தையும் அனுமதிக்கக் கூடாது."

தொழிலாளர்களுக்குக் குடியிருப்பு வசதி

சர்க்கார் செலவில் 1,800 விடுகள் கட்டப்படுமாம்

சென்னை மாநிலத்தில் சென்னை, திருச்சி, கோவை, இராமநாதபுரம், சேலம், மங்களூர் ஆகிய முக்கிய நகரங்களில், தொழிலாளர்களுக்கென சர்க்கார் செலவில் சுமார் 1,800 வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுமாம்.

சென்னை நகரில் மட்டும் தொழிலாளர்களுக்கென 1,000 வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்றும், அவைகள் அனைத்தும், சென்னை செம்பியத்திற்குஅருகிலுள்ள எருக்கஞ்சேரி எனுமிடத்தில் கட்டப்படு வருகின்றன என்றும், இவைகளைக் கட்டிமுடிக்க மொத்தம் ரூ. 25 இலட்சம் செலவாகும் என்றும், அத்தொகையில் பாதியை கடனாகவும், பாக்கி பாதியை உதவி மானியமாகவும் மத்திய சர்க்கார் தருகிறது எனவும் கூறப்படுகிறது.

திருச்சி கோவை, இராமநாதபுரம், சேலம், மங்களூர் ஆகிய இடங்களில் உள்ள 11 தொழிற்சாலைகள், தங்கள் தங்கள் தொழிலாளர்களுக்கென வீடுகள் கட்டித்தர முன்வந்துள்ளன; இத்திட்டப்படி மொத்தம் 877 வீடுகள் கட்டப்படுமென்றும், இதற்காகவே சர்க்கார், ரூ 8 இலட்சம் கடனாகவும் ரூ 5 இலட்சம் உதவியாகவும் கொடுத்திருப்பதாகவும், விரைவிலேயே இக்கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுவிடும் என்றும் கூறப்படுகிறது.

இது தவிர, மேலும் 6 தொழிற்சாலைகள், தங்கள் தொழிலாளர்களுக்கென 1,200 வீடுகள் கட்டித்தர முன்வந்துள்ளனவாம்; இதற்கான திட்டத்தை சென்னை சர்க்கார் இந்திய சர்க்காருக்கு அனுப்பியிருக்கிறார்களாம்; இத்திட்டம் டில்லி சர்க்காரால் ஒப்புக்கொள்ளப்பட்டால் மேற்படி தொழிற்சாலைகளுக்கு சர்க்கார் ரூ 11 இலட்சம் கடனாகவும், ரூ 8 இலட்சம் உதவி மானியமாகவும் தருவராம்.

இவைகளைப் போலவே சர்க்காரே ஏற்று நடத்தும் தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கும், நகரசபைத் தொழிலாளர்களுக்கும் குடியிருப்பு வசதிக்கான வீடுகள் கட்டித்தருவது பற்றி மத்திய சர்க்கார் ஆலோசித்து வருகின்றனராம்.

தொழிலாளர்களுக்குக் கட்டித் தரப்படும் வீடுகள் ஒரு அறை கொண்டவை—இரண்டு அறைகள் கொண்டவை என இருபிரிவுகளாக இருக்குமாம். ஒரு அறைமட்டும் உள்ள வீட்டிற்கு ரூ 10 வாடகை வாங்கப்படும் என்றும், இரண்டு அறைகள் கொண்ட வீட்டிற்கு ரூ 16 வாடகை வாங்கப்படும் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

வைத்தியத் துறைக்கு அணு உலை!

சிகிச்சைக்கும் — ஆராய்ச்சிக்கும் பயன்படக் கூடுமாம்

அமெரிக்காவிலுள்ள லாஸ் ஏஞ்சல்ஸ் கலிபோர்னியா பல்கலைக் கழகம் ஒரு அணு உலையை அமைக்கும்; இது வைத்திய சிகிச்சைக்கும், ஆராய்ச்சிக்கும் பயன்படுமாம். பல்கலைக் கழகத்தில், புது வைத்தியப் பிரிவில், இவ்வுலை அமைக்கப்படும்.

அணு உலைக்குத் தேவையான கட்டடத்தை 1,50,000 டாலர்செலவில் இப்பல்கலைக் கழகம் அமைக்கும். வைத்தியத் துறையில் சிகிச்சையளிப்பதற்கும், ஆராய்ச்சிக்குமாக அமைக்கப்படும் முதல் அணு உலை இதுவே!

இந்தியாவில் பருத்தி உற்பத்தி ஐந்தாண்டுத் திட்டக்கால இறுதியில் அடையவேண்டுமென்று கொள்ளப்பட்டிருந்த 'இலட்சிய அளவை (41.7 லட்சம் டன்) 1954—55-ம் ஆண்டிலேயே மிஞ்சிவிட்டது. அதே ஆண்டில் அதிகபட்சியாக உற்பத்தியாகிய பருத்தியின் அளவு 13 லட்சம் சிப்பங்கள்.

குடியுரிமை பெறுவதில் அக்கறை இல்லையாம்!

மனுக்கள் நிராகரிப்புக்கு இலங்கை அதிகாரிகள் கூறும் காரணம்

குடிஉரிமை மனுக்கள் பற்றிய விசாரணையின்போது, விசாரணைக்கு வரத்தவறியதின் காரணமாகப் பல இந்தியர்களின் குடிஉரிமை மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாக இலங்கை அதிகாரிகள் தெரிவித்திருக்கிறார்கள்.

இதுவரையிலும் நிராகரிக்கப்பட்ட மனுக்களில் 60 சதவிகிதத்திற்கு மேற்பட்டவை இந்தக் காரணத்தினாலேயே நிராகரிக்கப்பட்டவையாம்.

"இந்தச் செய்கை, இலங்கைக் குடியுரிமை பெறுவதில் இலங்கை இந்தியர்களுக்கு அக்கறையில்லை என்பதையே எடுத்துக்காட்டுகிறது" என்று அவ்வதிகாரிகள் குறிப்பிட்டிருக்கின்றனராம்!

"மனு விசாரணை பற்றிய அறிவிப்புகள் மேற்படி மனுச் செய்து கொண்டவர்கள் பலருக்கு சாதாரா செய்யப்படாததால்தான் அவர்கள், விசாரணையின்போது வர இயலாமற் போய்விட்டனர்," என்று, இந்திய அதிகாரிகள், இலங்கை அதிகாரிகளின் கூற்றுக்கு மறுப்பு கூறியிருக்கின்றனர்.

பாலாறு தண்ணீர் பிரச்சினையில்.........

மத்திய சர்க்கார் தலையீடு

பாலாறு தண்ணீர் விநியோகம் சம்மந்தப்பட்டப் பிரச்சினையில் மைசூர்—சென்னை மாநிலங்களிடையே இருந்துவரும் தகராறைத் தீர்த்துவைப்பதில் இந்திய சர்க்கார் தலையிட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

மேற்படி இரண்டு மாநிலத்தையும் சேர்ந்த பிரதம எஞ்சினீயர்கள் கூடி, பிரச்சினை குறித்து விவாதித்துப் பைசல் காண்பதில், மத்திய சர்க்கார் அதிகாரி ஒருவர் அவர்களுக்கு உதவியாக இருப்பார் என்று இந்திய சர்க்கார் ஆலோசனை கூறியிருக்கிறதாம்!

மத்திய சர்க்காரின் இந்த யோசனையை மைசூர் சர்க்கார் ஏற்றுக் கொண்டு விட்டதாகவும், இதுபற்றிய சென்னை சர்க்காரின் பதில் எதிர்பார்க்கப்படுகிறதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சென்னை சர்க்காரும் இப்பிரச்சினையில் விரைவிலேயே ஒரு சமரச முடிவு காண வேண்டுமென்று கருதுகிறதாம்.

வடஆற்காடு, செங்கற்பட்டு மாவட்டங்கள் வழியாக பாலாறு நதி பாய்கிறது. இந்த நதியில், மேற்படி இடங்களில் தண்ணீர் விநியோக அளவு குறைவானதாக இருந்ததால், அப்பகுதிகளில் விவசாய நிலமை பாதிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து மேற்படி இரு மாநிலங்களுக்குமிடையே தகராறு எழுந்தது.

இந்த நிகழ்ச்சிக்கு முன்னர் வரையிலும், சென்ற 1895-ம் ஆண்டில் இரு மாநிலங்களும் தங்களிடையே செய்துகொண்ட ஒப்பந்தம் ஒன்றின்படி விரிவான அளவில் பாலாறு தண்ணீரைப் பகிர்ந்துகொண்டு விவசாயம் நடத்தி வந்தன.

ஆனல், மேற்படி நிகழ்ச்சியை யொட்டி, பாலாறு நதியில் விடப்பட வேண்டிய தண்ணீரின் அளவு குறைக்கப்பட்டு விட்டது என்று சென்னை சர்க்காரால் மைசூர் சர்க்கார்மீது புகார் கூறப்பட்டது. பாலாறு நதியின் வடிகால் பகுதியில்—குறிப்பாகப் பேதமங்கலா, இராம[illegible] ஆகிய குளங்களுக்கு தண்ணீர் விநியோகம் பற்றி சரியான தகவல்கள் பெறுமாறு சென்னை சர்க்கார் மத்திய சர்க்காரைக் கேட்டுக்கொண்டது.

சென்னை சர்க்கார் கூறிய மேற்படி குற்றச்சாட்டுக்களைமைசூர் சர்க்கார் மறுத்து வந்துள்ளது—மறுத்தும் வருகிறது.

திருமணங்கள்

★

6—7—55 புதனன்று பெரிய குளத்தில் தோழர்கள் இரா. செடுஞ்செழியன், சி. பி. சிற்றரசு, எஸ். முத்து ஆகியோர் பாராட்டுதலுடன் நடைபெற்ற தோழர் மேத்தர், அவர்தம்பி தோழர் பாபா ஆகியோர் திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 5 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

10—7—55 ஞாயிறன்று தோழர் எஸ். எஸ். அருணகிரிநாதர் அவர்கள் தலைமையின் கீழ் தோழர்கள் இரா. செடுஞ்செழியன், சிவப்பிரகாசம் ஆகியோர் பாராட்டுரை வழங்க, சென்னையில் நடைபெற்ற அயனாம்பாக்கம் தோழர் சிங்காரம் — தோழியர் வாணி திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 3 அன்பளிப்பாகத் தரப்பட்டது

* * *

12—7—55 செவ்வாயன்று தோழர் சி. வி. எம் அண்ணாமலை அவர்கள் தலைமையின் கீழ் தோழர்கள் தசரதன் எம். ஏ., இரா. செடுஞ்செழியன், இராமலிங்கம் ஆகியோர் பாராட்டுரை வழங்க ஓரகடத்தில் நடைபெற்ற தோழர் அப்பாவு—தோழியர் நீலாவதி திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 5 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

11—7—55ல், சித்தூர் தோழர் என். கிருட்டினன் — தோழியர் புஷ்பாவதி அம்மையார் திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

7—7—55 காலை 8 மணிக்கு, திருக்கழுக்குன்றம், தேசமுகிப் பேட்டையில், தோழர் வீ. முருகன் — தோழியர் அ மாதரசி; தோழர் கு கன்னியப்பன்–தோழியர் எல்லம்மாள் திருமணம், தோழர் என். மாணிக்கம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் க. அன்பழகன், குருநாதன், நா. சுப்பிரமணியம் ஆகியோர் மணமக்களை வாழ்த்திப் பேசினர். இத்திருமண நினைவாக 'நம் நாடு' இதழுக்கு ரூ 5 நன்கொடை தரப்பட்டது.

* * *

10—7—55 காலை 9 மணிக்கு, சென்னை மீர்சாகிப்பேட்டை வெங்கடாசல முதலி வீதி, 128-ம் எண்ணுள்ள இல்லத்தில், தோழர் கோ. லோகநாதன் — தோழியர் க. தனலட்சுமி வாழ்க்கை ஒப்பந்தம் தோழர் கோ. இளவரசு தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் என். வி. நடராசன், மு கிருட்டிணமூர்த்தி, தோழியர் ஆரோக்கியமேரி ஆகியோர் மணமக்களை பாராட்டிப் பேசினர். இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை அளிக்கப்பட்டது.

* * *

10—7—55 காலை 10 மணிக்கு சென்னை, செங்குன்றத்திற்கடுத்த தியமாகர் கிராமத்தில், தோழர் மு. மாசிலாமணி—தோழியர் மு. பானையம்மாள்; தோழர் மு. எத்திராசன்—தோழியர் எ. முனியம்மாள் ஆகியோர் திருமணங்கள் தோழர் எம். கணபதி தலைமையில் நடைபெற்றன. இத்திருமணங்களின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 நன்கொடை தரப்பட்டது.

* * *

9—7—55 காலை 8 மணிக்கு சிறுகளப்பூரில், தோழர் ச. இராசகோபால்—தோழியர் அமிர்தம் சீர்திருத்த திருமணம் தோழர் பி. பெரியசாமி தலைமையில், திரு. முருகேசனர் அவர்களால் நடத்தி வைக்கப்பட்டது. தோழர்கள் பி. சந்திரபிரகாசம், கே குமாரசாமி ஆகியோர் மணமக்களை வாழ்த்திப் பேசினர். இத்திருமண நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை தரப்பட்டது.

* * *

11—7—55 காலை 9 மணிக்கு, சென்னை — பிரம்பை அடுத்த

திரு. க. சுந்தரம் பிள்ளை கொடைத் திறன்!

திண்டுக்கல், ஜூலை 7—

திண்டுக்கல்லைச் சேர்ந்த திரு. க. சுந்தரம் பிள்ளையவர்கள், தமக்குச் சொந்தமான சுமார் ரூ. 20,000 மதிப்புள்ள கட்டிடத்தின் வருமானத்திலிருந்து, திண்டுக்கல் நகர சபை உயர்நிலைப் பள்ளியில் பயின்று வரும் 7 ஏழை மாணவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ஒவ்வொருவருக்கும் ரூ. 5 வீதம் கொடுக்கவும், திண்டுக்கல் மலையடிவாரத்திலுள்ள இராமலிங்கசுவாமி ஆசிரமத்தில் எக்காலமும் தண்ணீர் பந்தல் நடத்தவும், அன்னதானம் செய்யவும், அந்தச் சொத்துக்களையெல்லாம் எழுதிவைத்திருக்கிறார்!

திரு. சுந்தரம் அவர்கள், ஏற்கனவே இங்கு இலவசப் பிரசவ விடுதிக்கான கட்டிடம் ஒன்று கட்டுவதற்கு ரூ. 5,000 நன்கொடை கொடுத்துள்ளார்.

தற்போது திண்டுக்கல் பொது மக்கள் அனைவரும், "இவைகளையெல்லாம் கண்ணுற்ற பின்னராவது நகர முக்கியஸ்தர்களும் கனதனவான்களும், நகர சபையினரும் நகருக்கு தவிர்க்க முடியாது. அவசியப்படுகிற ஒரு பெண்கள் உயர்நிலைப் பள்ளியை ஏற்படுத்த முயற்சிக்க மாட்டார்களா?" என்று எதிர்பார்க்கின்றனர். (ந-நி)

அறிவு வளர்ச்சி நாடக மன்றம் துவக்க விழா

10—7—55-ல், சென்னை—இராயபுரம், எண் 70-சி மேற்கு கல்மண்டபம் சாலையிலிருக்கும் இல்லத்தில் 'அறிவு வளர்ச்சி நாடக மன்றம்' தோழர் எ. கே. சாமி எம்.சி., அவர்களைத் தலைவராகக் கொண்டு துவங்கப்பட்டிருக்கிறது.

கொடுங்கையூரில், எண் 31 இல்லத்தில், தோழர் பா ஆறுமுகம்—தோழியர் இராணியம்மை வாழ்க்கை ஒப்பந்தம், தோழர் கே. எம். கண்ணபிரான் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் கோ. இளவரசு, சேதுராசன், பா. மதிவாணன், தோழியர் தேசியமணி ஆகியோர் மணமக்களைப் பாராட்டிப் பேசினர். இத்திருமண நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை அளிக்கப்பட்டது.

* * *

தியாகதுருகம் பன்னீர் செல்வம் படிப்பகத்தில், வேளாணத்தல் தோழர் க. பெரியசாமி—தோழியர் வீ. தஞ்சாயி சீர்திருத்தத் திருமணம், தோழர் மு. இரகுராமன் தலைமையில் நடைபெற்றது. இத்திருமண நினைவாக, 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை தரப்பட்டது.

* * *

7—7—55ல், காஞ்சியில், தோழர் தம்பிரான் — தோழியர் அன்னம்மாள்; தோழர் பாலகிருட்டிணன்—தோழியர் பாலம்மாள் திருமணம் தோழர் சி. வி. எம். அண்ணாமலை தலைமையில் நடைபெற்றது. இத்திருமண நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை தரப்பட்டது.

* * *

11—7—55 காலை 11 மணிக்கு கரிசல்குளம், வளாங்குடியில் தோழர் வீ. இருளப்பன்—தோழியர் வெங்கட்டி அம்மாள் திருமணம் தோழர் ச. முத்துகுமார் தலைமையில் நடைபெற்றது. இத்திருமண நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை தரப்பட்டது.

* * *

10—7—55 மாலை 7 மணிக்கு, திருச்சி, வரகனேரி குழுமித் தெருவில், வரகனேரி கிராம காட்டாண்மைக் கழகத் தலைவர் தலைமையில், தோழர் கா. பரிமணம்—தோழியர் அங்கம்மாள் திருமணம், தாலி கட்டாது சீர்திருத்த முறையில் நடைபெற்றது. தோழர்கள் ஜி. பராங்குசம், எம். எஸ். மணி, எஸ். செடுமாறன் ஆகியோர் வாழ்த்துரைகள் வழங்கினர். இத்திருமண நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை வழங்கப்பட்டது.

ஜுலை 15: வாழ்விலோர் திருநாள்

[1-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

ஆச்சாரியார், அமைச்சர் என்ற உருவில், நம்மீது ஏவிய நாசத்தால் நாம் நிர்மூலமாகிவிடவில்லை; அதற்கு மாருக முன்னிலும் பன்மடங்கு பலமும் வளமும் பெற்று வளர்ந்துள்ளோம்—வளர்ந்தும் வருகிறோம்.

ஆனல் ஆச்சாரியாரோ, அதிகாரத்திலிருந்து விரட்டப்பட்டு, ஆரிய ராமனைக் கட்டிக்கொண்டு ஒப்பாரிவைக்கும் ஓய்வுகாலப் பணியில் ஈடுபட்டுள்ளார்!

ஜுலை 15-ல், ஆளவந்தார்களின் அடக்குமுறைகளுக்கு ஆளாகி, உயிர்நீத்த நல்லவர்களுக்கும், உடல் குலைந்த உத்தமர்களுக்கும், குருதி கொட்டிய காளைகளுக்கும், சிறைபுகுந்து அல்லலேற்ற கழக வீரர்களுக்கும், நமது வாழ்த்தையும் பாராட்டுதலையும், இப்போராட்ட புனித நாளில், அன்பு காணிக்கையாகத் தருகிறோம்.

மும்முனைப்போராட்ட நினைவு நாள்

★

சென்னை :

சேத்துப்பட்டு இரயில் நிலையம் அருகாமையில்
15—7—55 மாலை 6 மணிக்கு
தலைவர்: இளம்பரிதி
பேச்சாளர்கள் :
இரா. நெடுஞ்செழியன்
ஆர். டி. அரசு
இன்னிசை:
குடந்தை-சீனிவாசன்
—தி மு.க. 33-வது வட்டம் (கிளை)

* * *

சென்னை—3-வது வட்டம்

15—7—55ல், மேற்படி வட்டக் கிளைக் கழகச் சார்பில், அச்சிடப்பட்ட துண்டு அறிக்கை வெளியிட்டு வழங்கப்படும்; அன்று மாலை 8 மணிக்கு கழக மனையில் தோழர் வி. கே. பி. சமி தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெறும்.

சென்னை—4-வது வட்டம்

15-7-55 காலை 9-மணிக்கு கழகப் பணிமனையில் சிறப்புக் கூட்டம் நடைபெறும்; சிறுவர்களுக்கு இனிப்புகள் வழங்கப்படும்.

சென்னை—7-வது வட்டம்

15—7—55ல், சென்னை-மூலக்கொத்தளம் தி மு. கழக அனுதாபிகள் சார்பில், காலையில் ஏழைகளுக்குக் கஞ்சி வழங்கப்படும்; மாலை சிறுவர்-சிறுமிகளுக்கு இனிப்பு வழங்கப்படும்; இரவு 9 மணிக்கு இன்னிசை நடைபெறும்.

சென்னை—37-வது வட்டம்

17—7—55 காலை 9 மணிக்கு சென்னை இராயப்பேட்டை தி. மு கழகப் பணிமனையில், மும்முனைப் போராட்ட நினைவு நாள் கூட்டமும், கொடியேற்று விழாவும் நடைபெறும் தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றுவர்.

★

மதுரை:

கீழமார்க்கெட் அண்ணு திடலில்
17—7—55 மாலை 6 மணிக்கு
பேசுவோர்:
ஆர். எம். வீரப்பா
எஸ். முத்து

அன்று காலை 10 மணிக்கு, ஆரப்பாளையத்தில், லால்குடி நடராசன் நினைவுப் படிப்பகத் துவக்க விழா நடைபெறும்.

★

கன்னிவாடி (தாராபுரம் வட்டம்)

ரேடியோ மைதானத்தில்
16—7—55 மாலை 6-மணிக்கு
தலைவர் :
கன்னிவாடிப்பெரியார்
பேசுவோர் :
ந. சின்ன முத்துசாமி
கண்ணுசாமி
கோதை-பொன்னப்பா

★

சென்னை—44-வது வட்டம்

சென்னை மயிலை 44-வது வட்ட தி. மு. கழகப் பணிமனையில் 15—7—55 இரவு 8 மணிக்கு தோழர் புது-மார்க்க—லோகநாதன் தலைமையில், மும்முனைப் போராட்ட நினைவு நாள் கூட்டம் நடைபெறும்.

சென்னை—46-வது வட்டம்

15—7—55 மாலை 6 மணியளவில், ஆள்வார்பேட்டை தி. மு. கழகச் சார்பில், தோழர் கோவிந்தனர் தலைமையில் கழக பணிமனை முன் கூட்டம் நடைபெறும்; தோழர் இரா. அகமழகன் சொற்பொழிவாற்றுவார்.

கழகக் கூட்டம்

★

பரங்கிப்பேட்டை :

சஞ்சீவிராயர் கோயில் எதிரில்
17—7—55 மாலை 6 மணிக்கு
தலைவர் : ஏ. சுப்பிரமணியம்
பேச்சாளர்கள் :
மீ. சு. இளமுருகு - பொற்செல்வி
மீ. சு. பொற்செல்வி - இளமுருகு

பெங்களூரில் பொதுச் செயலாளர்

வரவேற்புப் பொதுக் கூட்டம்

★

17—7—55 மாலை 6 மணிக்கு
சிக்கலால்பாக்கில் நடைபெறும
தலைவர்: ஏ. டி. பிரான்சிஸ்
பேசுவோர்:
இரா. நெடுஞ்செழியன்
ஜெ. கனகசுந்தரம்

குறிப்பு : அன்று பிற்பகல் 2½ மணிக்கு, தோழர் ஆர். ஆறுமுகம் தலைமையில் சீராமபுரத்திலிருந்து மாபெரும் ஊர்வலம் துவங்கும்; தி. மு. கழக மாநில மாநாட்டு நிதி ஏற்கப்படும்.

ஈ. வெ. கி. சம்பத் தமிழ்ப் பரணி!

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

வும் தலைமையாசிரியருக்குக் கூட இல்லை. பள்ளிகளில் தமிழாசிரியருக்கு அநீதி இழைக்கப்படுகிறது என்று சரியாகவோ, தவருகவோ மாணவர்கள் எண்ணினுல், அவருக்குப் பரிந்துகொண்டு பள்ளிக்குச் செல்லாமல், கிளர்ச்சியில் ஈடுபடுவதை அடிக்கடி கேள்விப்படுகிறோம். தமிழ்ப் புலவர்கள் அல்லது ஆசிரியர்கள் பெரிதும் 40, 50 வயது தாண்டியவரைத்தான் 10, 15 ஆண்டுகளுக்கு முன் காண முடியும்; இன்று, எங்கு நோக்கினும், இளைஞர்கள் தமிழ்ப் புலமை பெறப் பயில்வதையும், புதுமைபெற்ற தமிழாசிரியர்களாக விளங்குவதையும் சாதாரணமாகக் காண்கிறோம். இவையெல்லாம், தமிழுக்குக் கிடைத்துள்ள புதிய செல்வாக்கையும், மதிப்பையும் எடுத்துக்காட்டத் துணை புரியும் சான்றுகளாகும்

இந்தச் சூழ்நிலை, தலைசாய்ந்து கிடக்கும் தமிழர்கள் தலை தூக்குவதற்கான வழிவகைகளைக் கண்டறிய ஏற்றதோர் சூழ்நிலையாகும்

"இன்று நம்மவர் 100-க்கு 83 பேர் தற்குறிகள்; 17 பேர் படித்தவர். மேல் நாடுகளில் சராசரி மாத வருமானம் ரூ 100-க்கு மேலாகவே உள்ளது; நம்முடைய வருமானமோ 8 அணு கூலியிலிருந்து—டாடா, பிர்லா வருமானம் வரை கூட்டி; மக்களெண்ணிக்கையால் வகுத்து, சராசரி ஒருவர் வருமானம் ஆண்டுக்கு ரூ 240 என்று அரசியலார் கூறுகின்றனர்.

"நம் நாட்டை சுல்தான்கள், மராட்டியர், வெள்ளையர் எல்லோரும் ஆண்டிருக்கிறார்கள்; இந்நாளில், இந்தி பேசுவோர் ஆள்கின்றனர்; ஒவ்வொருவர் ஆட்சியிலும் அவரவர் மொழியைக் கற்றுக் கொள்ளுகிறோம்; கற்றுக் கொண்டால்தான் அரசியலில் பங்கு கொள்ள முடியும்—உத்தியோகம் பார்க்க முடியும்; இவ்வாறு கல்வித் துறையில், தற்குறிகள்—செல்வ நிலையில், தரித்திரர்கள் — அரசியலிலே அடிமைகள்! முன்பு இருந்த சிறப்புக்கள் எல்லாம் ஒடிந்துபோன ஒரு பரிதாபகரமான நிலை!

"தமிழ் மொழியைப் பற்றி நினைக்கின்றவர்கள், இதன் காரணத்தை ஆராயவேண்டும்; இன்று இவ்வாறு நினைப்பதில்தான் நமக்குள் பூசல் ஏற்படுகிறது.

"முற்காலத் தமிழர் கொண்டிருந்த கருத்துக்களை அறிவதற்கு இலக்கியங்கள் துணை செய்யும் புறநானூறு — வீரத்தைப் புகழ்கிறது; அகநானூறு—காதலைப் பொழிகிறது; குறள்—அறம் கூறுகிறது; அரசர், அமைச்சர், ஒற்றர்களைப் பற்றி—கணவனும் மனைவியும் என்ன தொடர்பு கொண்டிருந்தார்கள் என்பதைப் பற்றி யெல்லாம் கூறப்படுகிறது.

"இன்றையப் பண்பாடுகளுக்கு நேர்மாறானது அன்றைய பண்பாடுகள். திருவள்ளுவர் கடவுளைப்பற்றி கூறுகிறார்—அவற்றில், இன்றுள்ள கடவுள்களின் பெயர்கள் இல்லை; விநாயகர், வள்ளி தெய்வானையுடன் மயிலேறிய சுப்பிரமணியன், சங்கு சக்ராயுதத்துடன் கருடன்மீது அமர்ந்துள்ள மகாவிஷ்ணு, நடன சபாபதி, முப்பத்து முக்கோடி தேவர்கள், வசிட்டர், வால்மீகி அங்கில்லை; ஆனல் கடவுள் பற்றித்தான் கூறியுள்ளார். 'வாலறிவன், வேண்டுதல் வேண்டாமையிலான்' என்று கூறுகிறார்; 'தூய்மையான அறிவுள்ளவன், விருப்பு வெறுப்பற்றவன்,' என்று, கடவுள் தன்மையையே கூறுகிறார். ஓர் ஆளைக் காட்டவில்லை—உருவத்தைச் சமைக்கவில்லை — பெயரிட்டு வரலாறு கட்டவில்லை!

"இன்று, இம்மேடையில் தமிழர்களையே காண்கின்றேன். நாற்சாதி—சாதிக்குள் சாதிகளைக் கொண்டுள்ள இன்றையச் சமுதாயம்—விரிசல்கள் விட்ட கண்ணுடி போன்றுள்ளது; சாதிகளைச் சங்க நூல்களில் காண முடியாது; வள்ளுவர் கூறவில்லை. அரசர், அமைச்சர், ஒற்றர், படைத்தலைவர் முதலிய பெயர்களைக் காண்கிறோமே தவிர, முதலியார். நாயுடு, நாயக்கர், பிள்ளை, படையாச்சி—என்ற சாதிப் பெயர்களைக் காண முடியவில்லை. அகநானூற்றில், 'ஒருவனும் ஒருத்தியும் காதல் கொண்டனர்,' என்றிருக்கிறதே ஒழிய, 'ஒரு நாயுடுவின் மகனும் முதலியாரின் மகளும் காதல் கொண்டனர்,' என்று இல்லை; அரசியலடிமைப் புத்தி இருக்கின்ற இன்று, சாதிகளைக் காண்கின்றோம்.

"தமிழருடைய குடும்பத்தில் ஒருவனும்—ஒருத்தியுமே வாழ்ந்தார்கள். இன்னொருத்தி மேல் ஆசை பிறந்தால் அவள் பரத்தை நிலையையே எய்த வேண்டும்—மனைவியாக முடியாது. 'மனைவிகள்' என்ற பேச்சே அங்கில்லை 'சேரன் — செங்குட்டுவன் இளங்கோ வேண்மாளுடன் பேசிக்கொண்டிருந்தான்,' என்று இருக்கிறதே தவிர, 'பதின்மூன்ருவது மனைவியான வேண்மாளோடு பேசிக்கொண்டிருந்தான்,' என்றில்லை. இன்று நாம் ஒருவரைப் பற்றி பேசுகின்ற பொழுது; 'அவருக்கென்ன குறை, எல்லாம் இருக்கிறது; ஐந்து மனைவிகள் உண்டு; ஆருவது மனைவியைப் பார்க்க அடுத்த ஊர் போயிருக்கிறார்,' என்று கூறுகிறோம்; அதற்காகப் பெருமைப்படுகிறோம் இவை எப்படி நுழைந்தன?

"ஆராய்ச்சி வாயிலாகப் பார்த்தால் இப்பகுதியில் புகுந்த புதிய மனிதர்கள் புதிய கடவுளோடும், புதிய தத்துவங்களோடும் வந்திருக்கிறார்கள்; இந்நாட்டு மக்களின் விழுமிய கருத்துக்களைத் தூக்கியெறிந்து விட்டு, தம் கருத்தைப் புகுத்துவதில் வெற்றி கண்டனர்; தசரதன் அறுபதினுயிரம் மனைவியை வைத்திருந்தான்—தற்கால கணக்குப்படி பார்த்தால் மூன்று முனிசிபாலிடிகள் வேண்டும்—அவ்வளவு மனைவியரைக் கொண்டிருந்தான்; அந்த உத்தம குணத்தவருக்கு இராமன் பிறந்தானும்; 'அந்த உத்தம குணம் நமக்கும் இருக்கட்டும்,' என்று கருதியே, நம்மவர்கள், அறுபதினுயிரம் இல்லையானுலும், இரண்டு—மூன்று மனைவியரையாவது மணக்க முன் வந்தனர்;

"அதுபோலவே, சாதிகளைப் பார்க்கிறோம்; 'வேதம் சொல்கிறது—பரமசிவன் பார்வதிக்குச் சொன்னர்—பார்வதி நந்தி தேவருக்குச் சொன்னர்—நந்தி நாரதருக்குச் சொன்னர்—நாரதர் நரசிம்மாச்சாரிக்குச் சொன்னர்—அவர் என்னிடம் சொன்னர்—பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்று நால்வகை சாதி,' என்று இவ்வாறு சாதிகள் புதியவர்களால் புகுத்தப்பட்டன.

"அன்று, செங்குட்டுவன், வில்லவன் கோதை ஆகியோர் கத்தியால் போர் செய்தனர்—மந்திரங்களும், அஸ்திர சாஸ்திர பாசுபதாஸ்திரங்களும் கொண்டல்ல—இவற்றைக் கொண்டு போர் செய்தவர்கள் வீமன், அர்ச்சுனன் முதலியோர்; மந்திரம் சொல்லி பாணம் தொடுத்தான்; அஸ்திரம் எய்தி வனத்தை எரித்தான், என்பன போன்ற கதைகளை 'வீரக் கதைகள்' எனக் கொண்டாடத் தொடங்கிவிட்டோம்; அவர்களால் வீரம், அரசு, கல்வி, பண்புகள் யாவற்றையும் இழந்தோம்.

முறுக்கு மீசைத் தமிழன் வெளியில் புறப்பட்டதும் பூனையைக் கண்டால் அஞ்சுகின்முன்; படித்தவர்களும் இராகு காலத்திற்கு அஞ்சுகின்றனர்; செய்தித் தாள்களில் இராசிபலன் வருகிறது; கடகத்திலிருப்பதை விருச்சகத்திலும், விருச்சகத்திலிருப்பதை இன்னென்றுசகுமாக வாரா வாரம் மாற்றி, அச்சுக் கோர்ப்பவர்கள் போட்டிருப்பார்கள்; அவர்களே தான் நமக்கு வாரபலன் தருகின்றவர்கள்; இப்படிப்பட்டவர்களைக் கொண்டிருக்கும் நாடு என்ன பலத்துடன் இருக்கும்? பெரியவர்கள் சொன்னர்கள் என்கிறோம்; 800 ஆண்டுகட்கு முன் இருந்த நம் முன்னோர், பெரியவர்கள் அல்லவா? வசிட்டர், வால்மீகி, விசுவாமித்திரர்கள்தான் பெரியவர்களா? புரோகிதன் 4 அணுவிற்குத் திருமண நாள் குறித்துத் தருகிருன்—வசிட்டர், விசுவாமித்திரர் எழுதிய வறறைக் கொண்டுதான் குறிப்பிடுகின்முன். அவர்கள், இராமன்—சீதை மணநாள் குறித்தது என்னவாயிற்று? முடிசூட்டுவதில் சதி—தசரதன் இறப்பு—காடு செல்லல்—சீதையைப் பறிகொடுத்தான்—வாலியைக் கொன்முன்—வீடணனுக்கு முடி சூட்டினன்—இராவணனைக் கொன்முன்—சீதை மீது சந்தேகம் கொண்டு மீண்டும் சீதையைக் காட்டுக்குத் துரத்தினன்—லவ, குசலவர் பிறப்பு கண்டு சந்தேகம்—சீதை நிலத்தில் புதைந்தாள்—இராமன் ஆற்றில் இறந்தான்—அவர்கள் குறித்ததே அப்படியென்ருல், 4-அணுவிற்குக் குறிப்பு அவன் வைத்தால், என்ன செய்யும் என்பதைச் சிந்திக்க வேண்டுகிறேன்."

****

தலைமைக் கழகம் : அறிக்கை—21/55

மாவட்டச் செயலாளர் பொதுக்குழு உறுப்பினராதல்

தி. மு. கழக மாவட்டக் கிளைச் செயலாளர்கள், மாவட்டக் கிளைச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்படும் அளவிலேயே பொதுக்குழு உறுப்பினராகும் தகுதி அளிக்கப்படுகின்றது.

மாவட்டச் செயலாளரைத் தவிர்த்து, சென்னை மாவட்டக் கிளை பன்னிரண்டு பொதுக்குழு உறுப்பினர்களையும், பிற மாவட்டக் கிளைகள் (பெங்களூர், சித்தூர் மாவட்டக் கிளைகள் தவிர) பத்து பொதுக்குழு உறுப்பினர்களையும் தேர்ந்தெடுத்துக்கொள்ளும் உரிமை அளிக்கப்படுகின்றது.

மாவட்டச் செயலாளர் தம் அளவிலே பொதுக்குழு உறுப்பினராவதன் மூலம், மாவட்டக் கிளையினுல் தேர்ந்தெடுக்கப்படும் பொதுக்குழு உறுப்பினர் இடம் காலி ஏற்படுமேயானுல், அந்த இடத்தை நிறைவு செய்துகோள்ள மாவட்டக் கிளைகள், அடுத்து கூடும் கிளைக் கூட்டத்தில் ஒரு பொதுக்குழு உறுப்பினரைத் தேர்தல் முறைப்படி மாவட்டச் செயலாளர் தலைமையின் கீழ்த் தேர்ந்தெடுத்துக்கொள்ளலாம்.

மேற்கூறப்பட்ட புதிய விதிக்கேற்ப, மாவட்டக் கிளைச் செயலாளர்கள் என்ற முறையில் பொதுக்குழு உறுப்பினர்களாக ஏற்றுக்கோள்ளப்படுபவர்கள் கீழ்க்கண்டவர்களாவார்கள் —

1. இளம்பரிதி	7. என். எஸ். இளங்கோ
2. கே. டி. எஸ். மணி	8. அம்பில் தருமலிங்கம்
3. முல்லை-சத்தி	9. எஸ். முத்து
4. ஜி. பி. சோமசுந்தரம்	10. இ. எல். எம். சௌந்தரபாண்டியன்
5. ஈ. வெ. கி. சம்பத்	11. கே. வி. கே. சாமி
6. ஆர். சாம்பசிவம்	12. வி. எம். ஜான்

"அறிவகம்," சென்னை 14-7-1955

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. கழகம்

****

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம் ஏ